[1972 ஆகஸ்ட் 21

தனியாக ஒரு வரவேற்புத் தாசில்தாரை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது நியமனம் செய்யப்படுவார் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, இராமனுதபுரம் மாவட்டம் பிற்பட்ட மாவட்டம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட் டிருக்கிறது. அதுவும் இராமனுதபுரம் தாலூகா, இராமனுதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட வட்டம் என்று நம் அமைச்சர் அவர் களுக்குத் தெரியும். பொதுவாக, அங்கே இருக்கும் கூட்டாட்சித் தலைவருக்கு வாரத்தில் நான்கு நாட்கள் இராமேஸ்வரம் கோயி லுக்குச் செல்ல வேண்டும். வரும் பிரமுகர்களை வரவேற்பதுதான் முக்கியமான வேலைகளாக இருக்கின்றன. ஆக, திட்டங்கள், பொது மக்களுக்கு உதவி செய்யும் காரியங்களைக் கூட்டாட்சித் தலைவர் பார்க்க முடியவில்லை என்ற குறை அந்தத் தாலூகாவில் இருக்கிற காரணத்தால், ஆலயத்திற்கு வரும் பிரமுகர்களை வரவேற்க தனித் தாசில்தார் போடுவதை சர்க்கார் பரிசீலனை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்தக் கோரிக்கை அனுப்பப்பட்டு, அரசுத் தரப்பில் நிராகரிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், அங்கே வரும் பிரமுகர்களை வரவேற்க, தனி அதிகாரியை நியமித்துள்ளோம். இலங்கை அகதிகளை வரவேற்று, அவர்களின் புது வாழ்வுக்காக அதிகப் பணிகளை நிறை வேற்றுகிறோம். இவர்களே இதையும் செய்ய வேண்டுமென்று அரசு தற்போது கருதுகிறது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சரே இதையும் கவனிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

*Archaka Training*

* 166 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the steps taken by the Government to give training for the members of all the communities for the Archaka Office during 1971-72; and

1972 ஆகஸ்ட் 21]

(b) the number of persons so trained for the year community-wise?

அர்ச்சகர் பயிற்சி.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971–72-ல் சமூகத்திலுள்ள எல்லா வகுப்பினரையும் சேர்ந்தவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சியளிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) அவ்வாண்டில், அங்ஙனம் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் வகுப்பு வாரி எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/71) இந்து சமய நிறுவனங்களில் உள்ள பரம்பரை அர்ச்சகர் முறையினை நீக்க வகை செய்கிறது. தற்போதுள்ள அர்ச்சகர்களுக்குப் பயன் தரத்தக்கதாகவும், தற்போதுள்ள அர்ச்சகர்களைத் தொடர்ந்து வரும் சமய அமைப்பிற்கான நபர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கவும் இதில் மற்றுமொரு படியாக ஒவ்வொரு குழுவிலும் மூன்று பிரசித்தி பெற்ற நபர்களைக் கொண்ட வைகானசம், பாஞ்சராத்ரம் மற்றும் சைவாகமம் ஆகியவற்றில் சௌகரியமான மையங்களில் ஆகமப் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக மூன்று குழுக்களை அரசு அமைத்துள்ளது. பாடத் திட்டங்கள், கல்விக்கான கால அளவு, நடத்தப்பட வேண்டிய தேர்வுகள், வழங்கப் பெற வேண்டிய சான்றிதழ்கள் பற்றியும் இத்திட்டம் பற்றிய இதர பொருட்கள் பற்றியும் முடிவுகள் செய்வதற்கும், புத்தகங்களைத் தயாரித்தல், மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றிற்காகவும் இக்குழுக்கள் அமைக்கப் பெற்றன. இதற்கிடையில், சில மடாதிபதிகளும், அர்ச்சகர்களும் இந்தச் சட்டத்தின் செயல்திறனை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளதோடு ஒரு தலையாக தடை ஆணையும் பெற்றிருந்தனர். இதனால், அர்ச்சகர்களுக்கான பயிற்சிக் கேந்திரங்களை ஆரம்பிக்கும் திட்டம் அமலுக்குக் கொண்டு வர முடியவில்லை. ரிட் மனுக்களை உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்து விட்ட காரணத்தினால், பயிற்சி அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### Idols

* 167 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that some idols were removed from Sembu Urani at Eachangudi Village, Thanjavur district, during 1st quarter of 1970;

(b) if so, the details of the idols lost and their value; and

(c) the action so far taken in the matter?

### தெய்வச் சிலைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்குடி கிராமம், செம்பூருணியிலிருந்து தெய்வச் சிலைகள் சில அகற்றப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், காணுமற் போன சிலைகளும், அவற்றின் மதிப்பும் பற்றிய விவரங்கள் யாவை ?

(உ) இது குறித்து இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினுக்களுக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதியில் இந்தக் கேள்வியை முதலமைச்சரிடம் கேட்டேன். இல்லை என்று சொன்ஞர். பத்திரிகையில் ஏற்கெனவே செய்தியாக வந்திருக்கிறது என்று தெரிவித்தேன். அதற்குப் பிறகு, கைப்பற்றப்பட்ட சிலைகள் தஞ்சை தாலூகா நிலையத்தில் இருப்பதாக அறிந்தேன். பிடிபட்டவர்கள் நிலை என்ன? போட்ட வழக்குகள் என்னவாயிற்று என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தஞ்சை பக்கத்தில், ஈச்சங்குடியில் 1970-லிருந்து இன்று வரை எந்தச் சிலையும் திருட்டு போகவில்லை. கிராம அதிகாரி விசாரித்து, காவல் நிலையத்திலும் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்குகள் பதிவாகவில்லை என்று தெரிவித்திருக்கிறேன். அதே நேரத்தில் பக்கத்து கிராமத்தில் ரிகார்டில் கொண்டுவரப்படாத சிவ, விஷ்ணு, ஐயனூர் கோயில்